## ஜனவரி மாத சாதாரன கூட்டம் மன்றபொருள் 2021

**மன்றப்பொருள் 1**

காயல்பட்டணம் நகராட்சிக்கு உட்பட்ட மீனவ கிராமங்களிலுள்ள 30 புதிய மீனவப்பயனாளிகளிடம் (22 மீனவ பயனாளிகள் மற்றும 8 மீனவ மகளிர் பயனாளிகள்) மீன்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றம் சம்பந்தப்பட்ட மீனவர் கூட்டுறவு சங்கத்தலைவர் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1506/அ3/2020 நாள் 20.01.2021 ன் படி இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியலில் உள்ள பயனாளிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதப்படி, சுகாதார ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு , அனைவரும் (30 நபர்கள்) வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள் என சான்றளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | மீனவ கிராமத்தின் பெயர் | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கடையக்குடி | கொம்புத்துறை | 3 | கொம்புத்துறை | 4 |
| 2 | கற்புடையார் பள்ளி வட்டம் | சிங்கித்துறை | 19 | சிங்கித்துறை | 4 |
| | | மொத்தம் | 22 | மொத்தம் | 8 |

## தீர்மான எண்-2093,பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 2**

காயல்பட்டணம் நகராட்சியில் சிறப்பு சாலை திட்டம் 2020 – 21 ன் கீழ் சாலை பணிகள் மேற்க்கொள்வதற்கு ஒப்பந்தம் கோருவது தொடர்பாக டைம்ஸ் ஆப் இந்தியா மற்றும் நமது புரட்சி தலைவி அம்மா ஆகிய பத்திரிக்கையில் 24.12.2020 அன்று விளம்பரம் செய்த வகைக்கு செலவு தொகையாக அக்கார்டு நிறுவனத்திற்கு ரூ.61,538/– னை பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 1142/2019/இ1

## தீர்மான எண்-2094, அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 3

காயல்பட்டணம் நகராட்சியிக்குட்பட்ட இடங்களில் முடிதிருத்தகம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரிடமிருந்து தொழில் உரிமம் தொடர்பான விண்ணப்பத்தினை பெற்று 30 நாட்களுக்குள் சமர்பித்து உரிமம் பெற்றுக்கொள்ள தெரிவித்து பிற்பகல் என்ற பத்திரிக்கையில் 24.12.2020 அன்று விளம்பரம் செய்த வகைக்கு செலவு தொகையாக அந்த நிறுவனத்திற்கு ரூ.9990/– னை பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1142/2019/இ1

# தீர்மான எண்-2095, அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 4

காயல்பட்டணம் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020-2021ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட அலியார் தெரு சாலை, சித்தன் தெரு முதல் நயினார் தெரு சாலை, காட்டுத்தைக்காத்தெரு சாலை மற்றும் கடையக்குடி மனுவேல் விளை சாலை ஆகிய சாலைகளில் தார்ச்சாலைகள் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.110.00இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் நக.எண்.20557/2020/E3 நாள்.14.12.2020ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன்படி நகராட்சி நிர்வாக முதன்மை தலைமைப்பொறியாளர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் நக.எண். 23659/2020-37/DO2 நாள். 22.12.2020 ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 11.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) திரு.பி.மாடசாமி.
   118B NGO 'B' காலணி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி

2) எம்.மலையாண்டி பிரபு
   13/16ஏ, இடைக்குடி தெரு
   சாத்தான்குளம்

3) திரு.ஆர்.தலவாணிமுத்து
   38 பூந்தோட்டம்
   காயல்பட்டணம்

4) M/s THEJA STAG
   1/243-11 ஸ்ரீ கிருஷ்ணா நகர்
   மேல திருச்செந்தூர்
   திருச்செந்தூர்

மேற்கண்டவாறு வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்கண்டவாறு வரிசை எண். (1) மற்றும் (4)ல் கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியற்றதாக இருப்பதால் நிராகரிக்கப்பட்டும் வரிசை எண். (2) மற்றும் (3)ல் கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று இருந்ததால் அவர்களின் விலைப்புள்ளி உறை 20.01.2021 அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு (3வது விலைக்குறைப்பு சம்மதக்கடிதத்தின்படி) விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

1) திரு.ஆர்.தலவாணிமுத்து
   38 பூந்தோட்டம்
   காயல்பட்டணம் - மதிப்பீடு ரேட்டை விட 4.93% கூடுதல்

2) எம்.மலையாண்டி பிரபு
   13/16ஏ, இடைக்குடி தெரு
   சாத்தான்குளம் - மதிப்பீடு ரேட்டை விட 4.67% கூடுதல்

மேற்கண்டவாறு உள்ள ஒப்பந்ததாரர்களில் குறைவான விலைப்புள்ளி (மதிப்பீடு ரேட்டை விட 4.67% கூடுதல்) கொடுத்துள்ள திரு.எம்.மலையாண்டிபிரபு, சாத்தான்குளம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.

## தீர்மான எண்-2096, அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள் 5</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2020-2021ன் கீழ் கற்புடையார்பள்ளி வட்டத்தில் சர்ச் கிழக்கு தெருவில் பேவர் பிளாக்சாலை அமைத்தல் பணிக்கு 20.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

5) திரு.பி.மாடசாமி.
   118B NGO 'B' காலணி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி மதிப்பீடு ரேட்டை விட 1.22% கூடுதல்

6) எம்.மலையாண்டி பிரபு
   13/16ஏ, இடைக்குடி தெரு
   சாத்தான்குளம் மதிப்பீடு ரேட்டை விட 0.01% குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எம்.மலையாண்டிபிரபு, 13/16ஏ, இடைக்குடி தெரு,சாத்தான்குளம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

## தீர்மான எண்-2097, அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 6**

காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2020-2021ன் கீழ் கற்புடையார்பள்ளி வட்டத்தில் சர்ச் வடக்கு தெருவில் பேவர் பிளாக்சாலை அமைத்தல் பணிக்கு 20.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) திரு.பி.மாடசாமி.
   118B NGO 'B' காலணி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி — மதிப்பீடு ரேட்டை விட 1.12% கூடுதல்

2) எம்.மலையாண்டி பிரபு
   13/16ஏ, இடைக்குடி தெரு
   சாத்தான்குளம் — மதிப்பீடு ரேட்டை விட 0.01% குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எம்.மலையாண்டிபிரபு, 13/16ஏ, இடைக்குடி தெரு,சாத்தான்குளம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

## தீர்மான எண்-2098, அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்: 7**

காயல்பட்டணம் நகராட்சியில் உச்சிமகாளியம்மன்கோவில் தெரு நடுத்தெரு சாலை மண் சாலையாக இருப்பதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன் கருதி அத்தெரு சாலையினை சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## தீர்மான எண்-2099, அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
காயல்பட்டணம் நகராட்சி